புதிய புனல் மின் உற்பத்தி திட்டம் தற்போதைய நிலை (31.08.2018 வரையிலான)

1) கொல்லிமலை புனல் மின் திட்டம் (1 x 20 மெகா வாட்)

| | | |
|---|---|---|
| வகை | : | புனல் |
| நிறுவு திறன் | : | 1 x 20 மெகாவாட் |
| திட்ட மதிப்பு | : | ரூ.338.79 கோடி |
| அமைவிடம் | : | புளியஞ்சோலை கிராமம் நாமக்கல் மாவட்டம் |

தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.338.79 கோடிக்கு கொல்லிமலை நீர்மின் திட்டம் (1x20 மெகாவாட்) செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கும் மற்றும் ஒப்பந்தப் புள்ளி கோருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

கொல்லிமலை (1 x 20 மெகாவாட்) நீர் மின் திட்டத்திற்கான பணி ஆணை வழங்குவதற்கான கருத்துரு 23.08.2016 அன்று நடைபெற்ற 63 வது தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் வாரிய குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஒப்புதலின் மூலம் பணி தொடங்குவதற்கான பணி ஆணை 21.09.2016 நாளிட்ட கடிதம் முலம் M/s. K.Rajagopalan & Co, (Leader of Consortium)-SSIPL-GMW-HUNAN ALLONWARD, தொழில்கள் கூட்டமைப்பு, மேட்டூர் அணை, சேலம் மாவட்டம், தமிழ்நாடு, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த நீர்மின் திட்டத்தில் உள்ளடங்கிய பல்வேறு பகுதிகளுக்கான நில அளவை முடிவடைந்துள்ளது.

நீர் மின் சுரங்கத்திற்கான நிலம் தோண்டும் பணி நுழைவாயில் பகுதியிலும் உடன் பாறைகளை தாங்குவதற்கான பணிகளும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இந்த திட்டம் ஏப்ரல் 2021 முதல் பயன்பாட்டிற்க்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பம்..... 07.09.2018

மேற்பார்வை பொறியாளர்/ பொதுவியல்
வடிவமைப்பு மற்றும் நீர் மின் திட்டங்கள்
தலைமைப் பொறியாளர், பொதுவியல் வடிவமைப்பு சார்பாக